1973 டிசம்பர் 1]

* 544 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில், வடகோவையையும் காந்திபுரத்தையும் இணைக்கும் வகையில் இரயில் பாதையின் குறுக்கே கட்டப்படவிருக்கும் மேம்பாலத் திட்டக் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (அ) & (இ) இச்செயற் குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனைக்காக, விரிவான செயற் குறிப்புகளை அனுப்புமாறு நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவை எதிர்பார்க்கப்படுகின்றன.

வாகைகுளத்தில் விமான நிலையம்

* 545 வினா—திரு. என். கிட்டப்பா : }
திரு. என். கே. பழனிசாமி : } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தாலுக்காவில் வாகைகுளம் கிராமத்தில் விமான நிலையம் அமைத்திடும் திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி மத்திய அரசினை, மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தூத்துக்குடிக்கு அருகே விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அவசியத்தைப்பற்றி இந்திய அரசிடம் இவ்வரசு பன்முறை வற்புறுத்திக் கூறி வந்துள்ளது. தூத்துக்குடிக்கு விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது நிதி நிலையைப் பொறுத்ததாகும் என்று இந்திய அரசு நமக்குத் தெரிவித்துள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் விமான நிலையங்கள் ஏனைய வட மாநிலங்களில் இருப்பதைவிட மிகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் தூத்துக்குடி விமான நிலையத்தினை ஏற்படுத்த மேலும் துரிதப்படுத்தி விரைவில் அது அமைக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

[1973 டிசம்பர் 1

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தென் மாநிலத்தில் குறைவாக விமான நிலையங்கள் இருக்கின்றன என்ற காரணத்தை நாம் காட்ட முடியாது. தூத்துக்குடியில் விமான நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : தூத்துக்குடியில் தொழில் அதிகமாக அபிவிருத்தி ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, தூத்துக்குடியில் ஒரு விமான நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசுக்கு நேரடியாகச் சென்று வற்புறுத்த ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அமைச்சர்கள் அடிக்கடி நேரடியாகச் செல்லும்போது இதுபற்றி விவாதிக்கிறார்கள். மத்திய அரசு, நிதி நிலையைப் பொறுத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இன்னும் அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, யுத்த காலத்தில் உபயோகமாக இருந்த கயத்தார் விமான நிலையத்தை உபயோகிக்கலாம் என்று மத்திய அரசு கருதுவதாகத் தெரிகிறதே அது உண்மையா ? தூத்துக்குடியிலிருந்து 25 மைல் தூரத்தில் கயத்தார் இருக்கிறது. அதற்குச் சரியான போக்குவரத்து வசதி இல்லை. ஆகவே, நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற, தற்சமயம் அரசின் கருத்திலே இருக்கும் வாகைகுளத்தில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கு அருகில் விமான நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பது தமிழக அரசின் கோரிக்கை. அது எந்த இடத்தில் வைக்கலாம் என்பது குறித்து மத்திய அரசு தமிழக அரசைக் கலக்கும்போது அதுபற்றி இறுதியாக முடிவு செய்யலாம்.